# 04

## சுவனம் செல்வோம்

ஒரு முஸ்லிம் சுவனத்தை அடைவதையே தனது வாழ்வின் இலட்சியமாகக் கொள்ள வேண்டும். அதுவே, தான் பெறுகின்ற பெரும் பாக்கியமெனக் கருத வேண்டும். அதற்காக உழைக்க வேண்டும். அதனை அடைவதற்கு முழுமையாக முயற்சிக்க வேண்டும். இதனால்தான் அல்குர்ஆன் பல இடங்களில் சுவன இன்பங்களை எடுத்துரைத்துள்ளது. ஹதீஸ்களில் சுவன இன்பங்கள் பற்றி அதிகமாக எடுத்துரைக்கப்பட்டுள்ளன. ஸஹாபாக்கள் ஓர் ஒப்பற்ற சமூகமாக மாறுவதற்கு, அல்குர்ஆன் வசனங்களும் ஹதீஸ்களும் அவர்களது உள்ளங்களில் ஏற்படுத்திய தாக்கமே பிரதான காரணமாகும்.

ஸஹாபாக்களிடம் காணப்பட்ட, சுவர்க்கத்தை அடைய வேண்டும் என்ற ஆசை, எங்கள் ஒவ்வொருவரிடத்திலும் ஏற்பட வேண்டும். மறுமை வாழ்வில் நிரந்தர உறைவிடமாக அது அமைய வேண்டும் என நாம் ஒவ்வொருவரும் பிரார்த்திக்க வேண்டும். இதற்கு சுவர்க்கம், நரகம் பற்றிய அறிவு அவசியமானது. இப்பாடத்தில் அவை பற்றி அறிந்து கொள்ள முயற்சிப்போம்.

### சுவர்க்கம் பற்றிய சில அடிப்படை உண்மைகள்

- அது எமது கற்பனைக்கு அப்பாற்பட்ட ஓர் இடம்:

  ‘‘எந்தக் கண்ணும் பார்த்திராதவற்றை, எந்தக் காதும் கேட்டிராதவற்றை, எந்த உள்ளத்திலும் உதித்திராதவற்றை எனது நல்லடியார்களுக்காக நான் ஆயத்தப்படுத்தி வைத்திருக்கிறேன்’’ என அல்லாஹ் கூறுவதாக நபி ﷺ அவர்கள் குறிப்பிட்டார்கள் (புஹாரி).

- அது மிகவும் விசாலமானது:

  ‘‘ நீங்கள் உங்கள் இறைவனின் மன்னிப்பைப் பெறுவதிலும் சுவனத்தைப் பெறுவதிலும் முந்திக் கொள்ளுங்கள். அந்தச் சுவனம் வானம் பூமியின் அளவு விசாலமானது’’ (3:133)

- சுவன இன்பங்களோடு ஒப்பிடுகின்றபோது இவ்வுலக இன்பங்கள் மிக அற்பமானவை:

  ‘‘அல்லாஹ்வின் மீது சத்தியமாக, மறுமையோடு ஒப்பிடுகையில் இவ்வுலகம் உங்களில் ஒருவர் தனது விரலை கடலில் அமிழ்த்தி விட்டு வெளியே எடுப்பதைப் போன்றதாகும். அவ்விரலில் கடலிலிருந்து என்ன வெளிவந்திருக்கின்றது என அவர் நோக்கட்டும்’’ (முஸ்லிம்).

- அது மிகப் பெறுமதி வாய்ந்த, விலைமதிக்க முடியாத ஓர் இடம்:

  ''தங்கத்தினால் ஒரு கல், வெள்ளியினால் ஒரு கல். அதன் சாந்து தூய்மையான கஸ்தூரி. அதில் காணப்படும் சிறு கற்களோ முத்துக்களும் இரத்தினங்களுமாகும். அதன் மண் குங்குமமாகும். யார் அதில் நுழைகின்றாரோ அவர் இன்பமாக இருப்பார்; துன்பத்துக்குள்ளாக மாட்டார். நிலையாக இருப்பார்; மரணிக்க மாட்டார். அவர்களது ஆடைகள் இற்றுப் போவதில்லை. அவர்களது இளமை குன்றிப் போவதில்லை'' (அஹ்மத்).

சுவர்க்கம் பற்றிய சில உண்மைகளை விளங்கிய நாம் அல்குர்ஆன் குறிப்பிடுகின்ற சுவர்க்க இன்பங்களுள் சிலவற்றை நோக்குவோம்.

❖ ''பயபக்தியுடையோருக்கு வாக்களிக்கப்பட்டுள்ள சுவனபதிக்கு உதரணமாவது, அதில் களங்கமற்ற, (பரிசுத்தமான) நீரருவிகள் இருக்கின்றன. (பரிசுத்தமான) ருசி மாறாத பாலாறுகளும் இருக்கின்றன. குடிப்போருக்குப் பேரின்பமளிக்கக் கூடிய மது ஆறுகளும் இருக்கின்றன. மேலும் தெளிவான தேனாறுகளும் இருக்கின்றன. அன்றி அதில் அவர்களுக்கு எல்லாவிதமான கனி வகைகளும் தங்கள் இறைவனின் மன்னிப்பும் உண்டு'' (அல்குர்ஆன் 47:15).

❖ ''அவ்விரண்டிலும் பலவகைக் கனிகளும், பேரீச்சம் பழங்களும் மாதுளையும் உண்டு'' (அல்குர்ஆன் 55:68).

❖ ''அவர்களுக்கு நிலையான சுவனங்கள் இருக்கின்றன. அவற்றின் கீழே ஆறுகள் ஓடிக் கொண்டிருக்கும். அங்கு அவர்களுக்கு தங்க வளையல்கள் அணிவிக்கப்படும். மேலும் மெல்லிய மற்றும் அழுத்தமான பச்சை நிற பட்டாடைகளையும் அணிவார்கள். மேலும் உயர்ந்த ஆசனங்கள் மீது சாய்ந்திருப்பார்கள். இது மிகச் சிறந்த நற்கூலியும் உயர்ந்த தங்குமிடமுமாகும்'' (அல்குர்ஆன் 18:31).

❖ ''அவர்கள் முள்ளில்லாத இலந்தை மரத்தின் கீழும், மேலும் அடுக்கடுக்கான குலைகள் கொண்ட வாழை மரத்தின் கீழும், பரந்து விரிந்திருக்கும் நிழல், எப்போதும் ஓடிக் கொண்டிருக்கும் நீர், என்றைக்கும் தீர்ந்து விடாத தங்கு தடையின்றிக் கிடைக்கக் கூடிய ஏராளமான கனிகள் மற்றும் உயர்ந்த விரிப்புகளில் இருப்பார்கள்'' (அல்குர்ஆன் 56:28-34).

❖ ''இன்னும் அவர்கள் தெரிந்தெடுக்கும் கனி வகைகளையும் விரும்பும் பட்சிகளின் மாமிசத்தையும் (கொண்டு அவ்விளைஞர்கள் வருவார்கள்)'' (அல்குர்ஆன் 56:20-21).

❖ ''நிச்சயமாக நல்லவர்கள் குவளைகளிலிருந்து (பானம்) அருந்துவார்கள். அதன் கலப்பு கற்பூரமாக இருக்கும் (கா.:.பூர்) ஒரு ஊற்றாகும். அதிலிருந்து அல்லாஹ்வின் நல்லடியார்கள் அருந்துவார்கள். அதை (அவர்கள் விரும்பும் இடங்களுக்கெல்லாம்) ஓடைகளாக ஓடச் செய்வார்கள்'' (அல்குர்ஆன் 76:5-6).

இத்தகைய இன்பங்கள் நிறைந்த சுவனபதியை அடைய வேண்டுமெனில் அதற்காக வாழ்வின் இறுதி மூச்சு வரை உழைப்பது அவசியமாகும். அல்குர்ஆனும் ஹதீஸும்

குறிப்பிடும் அல்குர்ஆன், ''போட்டியிட்டு முந்திக் கொள்ள முயல்பவர்கள் இதனை அடைந்து கொள்வதில் முந்திக் கொள்ள முயலட்டும்'' (அல்குர்ஆன் 83:26) என குறிப்பிட்டுள்ளதை நாம் ஒவ்வொருவரும் என்றும் நினைவில் கொள்ள வேண்டும்.

ஈமானும் நற்கருமங்களுமே சுவனத்தை அடைவதற்கான தகுதிகளாகும். சுவனத்தை அடைய நாம் செய்யக் கூடிய பல நற்கருமங்கள் உள்ளன. இங்கு அவற்றுள் சிலவற்றை நோக்குவோம்.

- மஸ்ஜிதுடனான தொடர்பை அதிகப்படுத்துவோம்.
- மனிதர்களுக்கு தொந்தரவு கொடுக்கும் அனைத்தையும் தவிர்த்திடுவோம்.
- பெற்றோருக்குப் பணிவிடைகள் செய்வோம்.
- உறவினர், அயலவருடன் நல்லுறவைப் பேணுவோம்.
- ஸுன்னத்தான விடயங்களிலும் ஈடுபாடு கொள்வோம்.
- பொதுவாக நற்கருமங்கள் அனைத்திலும் ஈடுபடுவோம்.

அல்லாஹ், நல்லடியார்களுக்கு சன்மானம் வழங்குவான். பாவிகளுக்குத் தண்டனையும் வழங்குவான். பாவிகளுக்குத் தயார்படுத்தி வைக்கப்பட்டுள்ள இடமே நரகமாகும்.

## நரகம் மிகவும் பயங்கரமான இடம்

நரகம் மிகப்பயங்கரமான இடமாக இருப்பதனால் பாவச் செயல்களிலிருந்து கண்டிப்பாகத் தவிர்ந்து கொள்வோம்.

நரகம் பயங்கரமானது என்பதை புரிந்துகொள்ள கீழேயுள்ள அல்குர்ஆன் வசனங்களை நோக்குங்கள்.

❖ ''யார் வேத வசனங்களை நிராகரிக்கிறார்களோ அவர்களை நாம் நிச்சயமாக நரகில் புகுத்தி விடுவோம். அவர்களது தோல்கள் கருகிவிடும் போதெல்லாம் வேறு தோல்களை, அவர்கள் வேதனையை (பூரணமாக) அனுபவிப்பதற்காக அவர்களுக்கு நாம் மாற்றிக் கொண்டே இருப்போம்'' (அல்குர்ஆன் 4: 56).

❖ ''அதற்குப் பின்னர் பொய்யர்களாகிய வழிகேடர்களே! நிச்சயமாக நீங்கள் ஸக்கூம் (எனும் கள்ளி) மரத்திலிருந்தே புசிப்பீர்கள். ஆகவே அதைக் கொண்டே வயிறுகளை நிரப்புவீர்கள். அப்புறம் அதன் மேல் கொதிக்கும் நீரையே குடிப்பீர்கள். பின்னும் தாகமுள்ள (ஹீம்) ஒட்டகை குடிப்பத்தைப் போல குடிப்பீர்கள். இதுதான் நியாயத் தீர்ப்பு நாளில் அவர்களுக்கு விருந்தாகும்'' (அல்குர்ஆன் 56: 51-56)

எமது வாழ்வு இவ்வுலகோடு முற்றுப் பெறுவதில்லை. அது மரணத்தின் பின்பும் தொடர் கின்றது. எனவே சுவனம் நுழையும் பாக்கியத்தைப் பெறுவதும் நரகிலிருந்து காப்பாற்றப்படு வதுமே நாம் வாழ்க்கையில் அடைகின்ற மிகப் பெரிய, ஈடிணையற்ற வெற்றியாக அமையும்.

‘‘ஒவ்வோர் ஆத்மாவும் மரணத்தைச் சுகித்தே ஆக வேண்டும். அன்றியும் இறுதித் தீர்ப்பு நாளில்தான் உங்கள் (செயல்களுக்குரிய) கூலிகள் (பிரதிபலன்கள்) முழுமையாகக் கொடுக்கப்படும். எனவே எவர் (நரக) நெருப்பிலிருந்து பாதுகாக்கப்பட்டு சுவர்க்கத்தில் பிரவேசிக்குமாறு சொல்லப்படுகிறாரோ அவர் நிச்சயமாக வெற்றியடைந்து விட்டார். இவ்வுலக வாழ்க்கை, மயக்கத்தை அளிக்க வல்ல (அற்ப இன்பப்) பொருளேயன்றி வேறில்லை’’ (அல்குர்ஆன் 3:185).

எனவே நாம்,

- நரகை அஞ்சுவோம்
- அதிலே நுழைவிக்கக் கூடிய செயல்களை விட்டும் விலகியிருப்போம்
- அதிலிருந்து காப்பாற்றுமாறு பிரார்த்திப்போம்.
- சுவனத்தை நேசிப்போம்.
- நற்கருமங்களில் ஈடுபடுவதில் போட்டியிடுவோம்.
- சுவனத்தை அருளுமாறு பிரார்த்திப்போம்.

اَللّٰهُمَّ إِنِّيْ أَسْأَلُكَ الْجَنَّةَ وَأَعُوْذُ بِكَ مِنَ النَّارِ

‘‘இறைவா! உன்னிடத்தில் சுவனத்தைக் கோருகிறேன். நரகிலிருந்து உன்னிடம் பாதுகாப்புத் தேடுகிறேன்’’ (அஹ்மத்).

- ‘பிர்தவ்ஸ்’ என்ற சுவனத்தைக் கோர மறவாதிருப்போம்.

‘‘நீங்கள் அல்லாஹ்விடம் கேட்கும்போது ‘பிர்தவ்ஸ்’ என்ற சுவனத்தைக் கோருங்கள். அது மிகச் சிறந்த சுவனம். மிக உயர்ந்த சுவனம்’’ (புஹாரி).

**பயிற்சி:**

1. ஸூரா மு.'.மினூனின் 1-13 வரையுள்ள வசனங்கள் குறிப்பிடும் சுவனவாசிகளுக்குரிய பண்புகளுள் தினமும் நீர் பின்பற்றக் கூடிய பண்புகளைக் குறிப்பிடுக.
2. இவ்வுலக இன்பங்களுக்கும் சுவன இன்பங்களுக்கும் இடையிலுள்ள வேறுபாடு யாது?
3. ஸூரதுல் காஷியாவில் குறிப்பிடப்பட்டுள்ள சுவன இன்பங்களையும் நரக வேதனை களையும் அட்டவணைப்படுத்துக.

**செயற்பாடு:**

1. சுவர்க்க இன்பங்களையும் நரகத்தின் பயங்கரங்களையும் ஓர் உரைச் சித்திரமாக முன்வையுங்கள்.